**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்</u>**

**அசல் வழக்கு எண். 224/2021**

**வா.சா.3 – சந்திரமௌளி**

**<u>24–03–2026 சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. எனது அப்பாவும், எனது அண்ணனும் இதற்கு முன்பு மற்றும் குறுக்கு விசாரணையில் சொல்லியுள்ள அனைத்து சங்கதிகளும் சொல்லியுள்ளது உண்மையா பொய்யா என்றால் அவர்களது சாட்சியத்தை நான் பார்க்கவேண்டும். நீதிமன்றத்தில் இருந்து எனக்கு அழைப்பாணை வந்ததா என்றால் வழக்கறிஞர் சொன்னதன் பெயரில் வந்தேன். அழைப்பாணை வரவில்லை. எனது அப்பா சொல்லி நீதிமன்றத்திற்கு வந்தேனா என்றால் எனது அப்பாவும் சொன்னால் வழக்கறிஞரும் சொன்னார். எனது அப்பா என்ன வழக்கு போட்டுள்ளார் என்றால் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார். என்ன காரணத்திற்காக மேற்படி பரிகாரம் கேட்டுள்ளார் என்றால் எங்கள் உபயோகத்தில் உள்ள இடம் எங்களுக்கு நிரந்தரமாக வேண்டும் என்பதால் அவ்வாறு பரிகாரம் கேட்டுள்ளார்.

2. அவ்வாறு இடம் எங்களுக்கு வேண்டும் என்றால் விளம்புகை பரிகாரம் தான் கேட்கவேண்டும் என்றால் நாங்கள் பயன்படுத்துவதை பிரதிவாதிகள் இல்லை என்று சொன்னதால் நிரந்தர உறுத்துக்கட்டளை கேட்டோம். நாங்கள் பயன்படுத்தி வந்த இடத்தை அம்பேத்கார் இயக்கத்தில் இருந்து சில நபர்களை 2021ல் அழைத்து வந்து பிரதிவாதிகள் அவர்களுக்கு வேண்டும் என்று சொன்னார்கள். எவ்வளவு நபர்களை அழைத்து வந்தார்கள் என்றால் இரண்டு நபர்களை அழைத்து வந்தார்கள். அவர்களது பெயர் தெரியாது. நான் சொல்வது போல் அங்கு எந்த பிரச்சினையும் நடக்கவில்லை என்றால்

சரியல்ல. வந்த நபர்கள் ஆவணத்தை படித்து பார்த்து விட்டு 11 செண்ட் போகதான் எழுதி கொடுத்துள்ளார்கள் என்பதால் சென்றுவிட்டார்கள்.

3. பிரதிவாதியும் நாங்களும் மொத்தம் 50 செண்டிற்கு விலை பேசி ரூ.2000/- பணத்தை நாங்கள் பெற்றுக்கொண்டு 47 செண்டை மட்டும் கிரையம் செய்து கொடுத்துள்ளதால் மீதி 3 செண்டை தான் கிரையம் கேட்க பிரதிவாதிகள் வந்தார்கள் என்றும், நான் சொல்வது போல் எந்த பிரச்சினையும் அவர்கள் செய்யவில்லை என்றால் மொத்தம் ஆவணப்படி எங்களுக்கு 58 செண்ட் இருந்தது அதில் 47 செண்டை பிரதிவாதிகளுக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளோம். ஆவணப்படி 11 செண்டை வைத்துக்கொண்டுதான் மீதி 47 செண்டை பிரதிவாதிகளுக்கு கிரையம் செய்து கொடுத்தோம். 11 செண்டிற்கான செங்குபந்தி விபரம் சொல்லமுடியுமா என்றால் 395 உட்பிரிவில் 11 செண்ட் கூட்டுப்பட்டாவில் இருந்து தற்போது 395/5 ல் வாதி மற்றும் பிரதிவாதி பெயரில் பொதுவில் உள்ளது.

4. பொது பட்டா உள்ள போது பிரதிவாதிகளுக்கும் மேற்படி சொத்தில் வந்து போக உரிமை உள்ளதால் நான் கேட்கும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கிடைக்கத்தக்கது அல்ல என்றால் 11 செண்ட் இடம் ரோட்டை பார்த்தவாறு உள்ளது. தெற்கோட்டில் எங்களுக்கு சொத்தை வைத்துக்கொண்டு நாங்கள் பிரதிவாதிகளுக்கு மீதியை தான் கிரையம் செய்து கொடுத்தோம். பிரதிவாதிகளுக்கு செக்குபந்தி போட்டு கிரையம் செய்து கொடுத்துள்ளோமா என்றால் இல்லை. பிரதிவாதிகளின் சொத்தை அபகரிக்கும் நோக்கத்தோடு எனது தகப்பனார் போட்ட வழக்கிற்காக நான் பொய் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரியல்ல.

(குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது)

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

A SUBASHRI

Digitally signed by A SUBASHRI
Date: 2026.03.24 16:01:59 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.